# SRIRAM COACHING CENTER, PULIANGUDI

## ஆசிரியர் தகுதித்தேர்வு – உளவியலின் வரம்பும் வரையறையும்

1. ‘அபிப்பிராய விளைவுப் பிழை’ என்பது எதன் பாதிப்பால் உருவாகிறது
   அ) அகவயத்தன்மை ஆ) உற்றுநோக்கல் இ) புறவயத்தன்மை ஈ) அபிப்பிராயம்

2. மாணவரின் ‘வினாக்களுக்கு அளிக்கும் தற்கட்டுப்பாட்டின்(Self control)’ அளவை கண்டறிய பயன்படும் உளவியல் முறை
   அ) அகநோக்கு முறை ஆ) உற்றுநோக்கல் இ) களஆய்வு ஈ) பரிசோதனை

3. பியாஜேயின் ஆராய்ச்சி இவ்வகையைச் சார்ந்தது
   அ) நீள்ஆய்வு ஆ) குறுக்கு ஆய்வு இ) வேற்றுமை ஆய்வு ஈ) தொடர்ச்சி ஆய்வு

4. உளப்பகுப்பாய்வு கோட்பாடு இதன் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியுள்ளது
   அ) உடற்கூறு உளவியல் ஆ) மருத்துவ உளவியல்
   இ) குற்றவியல் உளவியல் ஈ) நெறிபிறழ் உளவியல்

5. குழு மனப்பான்மை மற்றும் சார்பெண்ணங்களை ஆராயப் பயன்படும் உளவியல் பிரிவு
   அ) ஒப்பீட்டு உளவியல் ஆ) குழு உளவியல்
   இ) சமூக உளவியல் ஈ) நடைமுறை உளவியல்

6. உளவியல் கோட்பாடுகளைக் கொண்டு கற்றல் - கற்பித்தலை மேம்படுத்தலே கல்வி உளவியல் என்றவர்
   அ) கோலஸ்நிக் ஆ) லிண்ட்கிரேன் இ) காரிசான் ஈ) இ.ஏ.பீல்

7. மையர்ஸ் - என்பவர் எத்துறை சார்ந்த உளவியலின் வளர்ச்சிக்கு உதவியுள்ளார்
   அ) மருத்துவ உளவியல் ஆ) குற்றவியல் உளவியல்
   இ) தொழில்துறை உளவியல் ஈ) மனிதப் பொறியியல்

8. அமைப்பு நிலைக் கொள்ளையின் முன்னோடியாகக் கருதப்படுபவர்
   அ) வில்லியம் ஜேம்ஸ் ஆ) வில்லியம் உண்ட்ட் இ) டிட்ச்னர் ஈ) டார்வின்

9. உளவியலானது பொருத்தப்பாட்டு நடத்தையைக் குறித்து ஆராயும் அறிவியலாக மாற உதவிய கோட்பாடு
   அ) அமைப்புநிலைக் கொள்கை ஆ) செயல்நிலைக் கொள்கை
   இ) முழுமைக்காட்சிக் கொள்கை ஈ) உளப்பகுப்பாய்வுக் கொள்கை

10. நடத்தையை உளவியலின் கருப்பொருளாகக் கொள்வதே அறிவுடைமை என்றவர்
    அ) பாவ்லோ ஆ) மக்டுகல் இ) வாட்சன் ஈ) தார்ண்டைக்

11. ‘உயிரியின் வெளிப்பாடே செயல்கள்.. செயல்களின் தொகுப்பே நடத்தை’ என்ற கருத்துக்கு சொந்தக்காரர்
    அ) டெஸிடெராட்டோ ஆ) மக்டுகல் இ) டிட்ச்னர் ஈ) உட்வொர்த்

12. ஊக்கம், வகுப்பறை மேலாண்மை, மனநலம் போன்றவற்றை கல்வி உளவியலின் உட்கூறுகளாக வகைப்படுத்தியவர்
    அ) கோலஸ்நிக் ஆ) லிண்ட்கிரேன் இ) காரிசான் ஈ) இ.ஏ.பீல்

13. வளர்ச்சி, கற்கும் கற்பிக்கும் முறைகள், மதிப்பிடல், வழிகாட்டுதல் போன்றவற்றை கல்வி உளவியலின் உட்பிரிவுகளாக வகைப்படுத்தியவர்
    அ) கோலஸ்நிக் ஆ) லிண்ட்கிரேன் இ) காரிசான் ஈ) இ.ஏ.பீல்

14. கற்கும் முறைகள், அனுபவங்கள், சூழ்நிலைகள் ஆகியவற்றை கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளாக வகைப்படுத்தியவர்
    அ) கோலஸ்நிக் ஆ) லிண்ட்கிரேன் இ) காரிசான் ஈ) இ.ஏ.பீல்

15. மனித மனம் 30,000 புலன்காட்சிகளால் வடிவமைக்கப்பட்டது என்ற ஆய்வு முடிவை வெளியிட்டவர்
    அ) டிட்ச்னர் ஆ) வில்லியம் ஜேம்ஸ் இ) வில்லியம் உண்ட் ஈ) உட்வொர்த்

16. அகநோக்கு முறை என்னும் உளவியல் முறையை அறிமுகப்படுத்திய கொள்கை
அ) அமைப்புநிலைக் கொள்கை ஆ) செயல்நிலைக் கொள்கை
இ) நடத்தைக் கொள்கை ஈ) உளவியல் கொள்கை

17. மனவாழ்வு மற்றும் நடத்தை குறித்த கருத்துகளை முன்மொழிந்து தனது கொள்கையை வெளியிட்டவர்
அ) வில்லியம் ஜேம்ஸ் ஆ) வில்லியம் உண்ட் இ) உட்வொர்த் ஈ) வாட்சன்

18. உயர்கற்றல், பயிற்சி, ஊக்கம் மற்றும் நினைவிலிருத்தலுக்கு விளக்கமளிக்காத கொள்கை என குற்றம் சாட்டப்பட்டக் கொள்கை
அ) நடத்தைக் கொள்கை ஆ) செயல்நிலைக் கொள்கை
இ) உளப்பகுப்பாய்வு ஈ) அமைப்புநிலைக் கொள்கை

19. கீழ்கண்டவர்களில் இங்கிலாந்து நாட்டைச்சார்ந்த உளவியலாளர் யார்
அ) வில்லியம் உண்ட் ஆ) வாட்சன் இ) வில்லியம் ஜேம்ஸ் ஈ) டிட்ச்னர்

20. ஒருவர் தனது அனுபவத்தை விளக்குகிறார். ஆனால் அவ்வனுபவத்தைத் தந்த பொருளைப்பற்றி விவரிப்பதில்லை. இது எந்த கொள்கையின் குறைபாடு
அ) அமைப்புநிலை ஆ) செயல்நிலை இ) நடத்தை ஈ) உளப்பகுப்பாய்வு

21. வில்லியம் ஜேம்ஸின் ஆய்வின் படி 'பழக்கம்' என்பது எதனுடைய பணி
அ) மூளை ஆ) நடத்தை இ) நரம்புமண்டலம் ஈ) நாளமில்லா சுரப்பி

22. கீழ்கண்டவர்களில் செயல்நிலைக் கொள்கையை முன்னெடுத்துச் செல்லாதவர்
அ) தார்ண்டைக் ஆ) பாவ்லோ இ) உட்வொர்த் ஈ) கேட்டல்

23. கற்றல் மாற்றம், சிந்தித்தல், ஆய்ந்தறிதல், தீர்வு காணல் போன்றச் செயல்பாடுகளை லிண்ட்கிரேன் எந்த கூறின் அம்சங்களாக கருதுகிறார்
அ) அனுபவங்கள் ஆ) சூழ்நிலைகள் இ) முறைகள் ஈ) கற்பவர்

24. இரண்டாம் உலகப்போரின் தாக்கத்திலிருந்து பிறந்த உளவியல் பிரிவு
அ) கல்வி உளவியல் ஆ) தொழில்துறை உளவியல்
இ) குற்றவியல் உளவியல் ஈ) மனிதப்பொறியியல்

25. லான், ஆல்ஸ்டைன் ஆகியோரது ஆய்வு இவ்வகையைச் சார்ந்தது
அ) நீள் ஆய்வு ஆ) குறுக்கு ஆய்வு இ) வேற்றுமை ஆய்வு ஈ) தொடர்ச்சி ஆய்வு

26. கோட்பாடுகளையும் கருத்துகளையும் உண்மை என நிரூபிப்பதற்கு துல்லியமான முறை
அ) தனியாள் ஆய்வு முறை ஆ) உற்றுநோக்கல் முறை
இ) வளர்ச்சி முறை ஈ) பரிசோதனை முறை

27. மருத்துவ முறை என்று அழைக்கப்படும் உளவியல் முறை
அ) தனியாள் ஆய்வு முறை ஆ) உற்றுநோக்கல் முறை
இ) வளர்ச்சி முறை ஈ) பரிசோதனை முறை

28. கட்டுப்பாடுக்கு உட்பட்ட உற்றுநோக்கல் என்பது எந்த முறை
அ) தனியாள் ஆய்வு முறை ஆ) உற்றுநோக்கல் முறை
இ) பரிசோதனை முறை ஈ) கள ஆய்வு முறை

29. உளவியல் என்பது 'மனிதன் உணர்ந்து செயல்படும் நடத்தைகளை மட்டுமே ஆராய்வதாகும்' என்றவர்
அ) வில்லியம் உண்ட் ஆ) விலல்லியம் ஜேம்ஸ் இ) வாட்சன் ஈ) டெஸிடெராட்டோ

30. 'நடத்தை சார் உளவியலின் தந்தை' என்று போற்றப்படுபவர்
அ) வில்லியம் மக்டுகல் ஆ) வில்லியம் உண்ட் இ) வில்லியம் ஜேம்ஸ் ஈ) வாட்சன்

**'எட்டிப்பிடித்தால் தொட்டுவிடும் தூரம் தான் வெற்றி'**
-செரட்டை மொழி

# SRIRAM COACHING CENTER, PULIANGUDI

## உளவியல் - தேர்வு 1

| | | |
|---|---|---|
| 1.அ) அகவயத்தன்மை | 2.ஆ) உற்றுநோக்கல் | 3.அ) நீள்ஆய்வு |
| 4.ஈ) நெறிபிறழ் உளவியல் | 5.இ) சமூக உளவியல் | 6.அ) கோலஸ்நிக் |
| 7.இ) தொழில்துறை உளவியல் | 8.ஆ) வில்லியம் உண்ட்ட் | 9.ஆ) செயல்நிலைக் கொள்கை |
| 10.இ) வாட்சன் | 11.ஈ) உட்வொர்த் | 12.அ) கோலஸ்நிக் |
| 13.இ) காரிசான் | 14.ஆ) லிண்ட்கிரேன் | 15.இ) வில்லியம் உண்ட் |
| 16.அ) அமைப்புநிலைக் கொள்கை | 17.அ) வில்லியம் ஜேம்ஸ் | 18.ஆ) செயல்நிலைக் கொள்கை |
| 19.ஈ) டிட்ச்னர் | 20.அ) அமைப்புநிலை | 21.இ) நரம்புமண்டலம் |
| 22.ஆ) பாவ்லோ | 23.இ) முறைகள் | 24.ஈ) மனிதப்பொறியியல் |
| 25.ஆ) குறுக்கு ஆய்வு | 26.ஈ) பரிசோதனை முறை | 27.அ) தனியாள் ஆய்வு முறை |
| 28.இ) பரிசோதனை முறை | 29.அ) வில்லியம் உண்ட் | 30.ஈ) வாட்சன் |

TNTET-PGTRB-TNPSC BEST STUDY MATERIALS CONTACT : 86789 13626